RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 96410 25996
Dr K. Namitha Bhuvaneswari — Sr Eye Surgeon — 9444 255754
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 9445 401793
Dr Shanthi R — Sr Vascular Surgeon — 9884 650945
Dr Salma R — General Physician — 87780 87742
Dr Praveena E — Sr ENT Surgeon — 9944 100443

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
வி.டார் ரெயின் போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 22 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 134

சென்னையில் உள்ள நெல்லை நாடார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் 42-வது ஆண்டு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி



நெல்லை – 22 நவம்பர், 2026 சென்னையில் உள்ள நெல்லை நாடார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் 42-வது ஆண்டு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்பு.

குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று (21.11.2026) சென்னை கொட்டிவாக்கத்தில் உள்ள நெல்லை நாடார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் 42- வது ஆண்டு விழாவில் உரையாற்றினார்.

அப்போது, பெருந்தலைவர் காமராஜருக்கு அவர் புகழஞ்சலி செலுத்தினார். காமராஜரின் தன்னலமற்ற தலைமைப் பண்பு, எளிமையான வாழ்க்கை, பொதுமக்களின் நலனில் அவர் கொண்டிருந்த அக்கறை ஆகியவற்றை அவர் நினைவுகூர்ந்தார். பெருந்தலைவர் காமராஜரின் புகழ் தமிழக மண்ணில் நிலைத்திருக்கும் வரை, தமிழகத்தில் உள்ள தேசிய உணர்வை உலகில் எந்த சக்தியாலும் அழிக்க முடியாது என்று குடியரசுத் துணைத் தலைவர் தெரிவித்தார்.

உள்கட்டமைப்பு வசதிகள், கல்வி ஆகிய துறைகளில் காமராஜர் செய்த சாதனைகள் ஈடு இணையற்றவை என்று அவர் குறிப்பிட்டார். காமராஜர் ஆட்சிக் காலத்தில் பல முக்கிய அணைகள் கட்டப்பட்டதை நினைவுகூர்ந்த குடியரசுத் துணைத் தலைவர், கல்வி, மனித வளம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாநிலமாகத் தமிழகம் திகழ்வதற்கு காமராஜர் அமைத்த அடித்தளமே முக்கியக் காரணமாக இருந்தது என்றார்.

தேர்தல் வெற்றியையோ, சொந்த நலனையோ ஒருபோதும் கருத்தில் கொள்ளாமல், அனைத்துக்கும் மேலாகப் பொதுமக்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்த தலைவராகக் காமராஜர் விளங்கினார் என்றும் குடியரசுத் துணைத் தலைவர் புகழாரம் சூட்டினார்.